Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 1 8-1-1985 செவ்வாய்க்கிழமை (ரத்தாக்ஷி மார்கழி 24) முழக்கம் 167

பிரிகேடியர் நளின் வேண்டுகோள்:

இராணுவத்தைக் கண்டதும் ஓட்டம் பிடிக்காதீர்கள்!

''இராணுவத்தைக் கண்டதும் ஓட்டம் பிடிக்காதீர்கள். அவர்கள் உங்கள் வீடுகளைச் சோதனையிட வந்தால் பாய்ந்து ஓடாதீர்கள்'' என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தின. ''இராணுவத்தைக் கண்டதும் நீங்கள் ஓட்டம் பிடிப்பதால் தான் உங்கள் மீது அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. அதனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது'' என்றும் சொன்ன பிரிகேடியர்,

—2-ஆம் பக்கம் பார்க்க

தீவிரவாத இளைஞருக்கு

பாரதம் அடைக்கலம் வழங்கவில்லை!

இனப்பிரச்சினை மீண்டும் ஆராயப்படும் - ராஜீவ்

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு எந்த முடிவும் காணாமல் முடிவடைந்ததையிட்டு வருத்தம் தெரிவித்துள்ள பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, இது தொடர்பாக மீண்டும் ஆராயப்படவிருப்பதாக 'நியுஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

''இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பாரதம் ஒரு போதும் விரும்பியது கிடையாது; இப்போதும் விரும்பவில்லை'' என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள ராஜீவ் காந்தி, இலங்கையின் இனக்கலவரத்தால் நாற்பதாயிரம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளதாலேயே இந்தப் பிரச்சினை தோன்றியது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகட்கு பாரதம் அடைக்கலம் அளித்துவருவதாக இலங்கை தெரிவித்துவரும் குற்றச்சாட்டைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் ராஜீவ்காந்தி தமிழ் தீவிரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கும், பாரதத்துக்கும் எந்தவிதமான தொடர்புமே கிடையாது என்றும் சொன்னதுடன், நல்லெண்ணத்துடன் அரசியல் ரீதியான முடிவு காணவே பாரதம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

சைக்கிள் 'பர்மிட்' விண்ணப்பம்

கிராம சேவகர் ஊடாகச் சமர்ப்பிக்கவும்!

பத்து நாட்களில் 'பர்மிட்' வழங்குவதற்கு திட்டம்; சைக்கிளுக்கு கலர் லேபல் இல்லை!

(எஸ். எஸ். ரி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைக்கிள்களை வைத்திருப்பவர்கள் அதனை வைத்திருப்பதற்கும், பாவிப்பதற்குமான 'பர்மிட்'டைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைத் தத்தமது பகுதிக் கிராமசேவகர்கள் ஊடாக, அந்தப் பிரதேச உதவி அரசாங்க அதிபர்களிடம் கையளிக்க வேண்டும். குடா நாட்டிலுள்ள பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர்கள்மூலம் 'பர்மிட்' வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் மறுபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய சைக்கிள் பர்மிட் வழங்கப்படும் முறை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், கணிசமான அளவு தொகையினருக்கு 'பர்மிட்' வழங்கப்படும் வரை தற்போதைய நடைமுறைகளே பின்பற்றப்படுமென்றும் வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தின நேற்றுமாலை

— 2-ஆம் பக்கம் பார்க்க

பாடசாலை மாணவர், அதிபர் மூலம் விண்ணப்பிக்க வசதி

சைக்கிள் பர்மிட் வழங்கும் விஷயத்தில்குடாநாட்டிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கான சுலபமான முறையொன்றைக் கடைப்பிடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பெரும்பாலான மாணவ மாணவிகளும் பாடசாலைக்குச் சைக்கிளில் சென்று வருவதாலும், பதினெட்டு வயதுக்குட்பட்ட மாணவர்களிடம் அடையாள அட்டை இல்லாததாலுமே இந்த வசதி

—2-ஆம் பக்கம் பார்க்க

இன்று பளைவரை ரயில் வரும்

இன்று முதல் யாழ்தேவி, இன்டர்சிற்றி ரயில்கள் பளை வரை வருமென அறிவிக்கப்

—2-ஆம் பக்கம் பார்க்க

தந்தைக்குரிய சைக்கிளை பிள்ளைகள் பாவிக்க முடியும்

ஒரு சைக்கிளுக்கு ஒரு 'பர்மிட்' மட்டுமே வழங்கப்படும். ஆனாலும் ஒரு குடும்பத்தில் தந்தையின் சைக்கிளை பிள்ளைகள் பாவிப்பதற்கு விசேஷ அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு பாவிப்பதானால் குறிப்பிட்ட பிள்ளைக்கு சைக்கிள் சொந்தக்காரரான தந்தை அனுமதிக் கடிதமொன்றைக் கொடுக்க வேண்டும். இக்கடிதத்தில் பிள்ளையின் பெயர், அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு தந்தை கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

தந்தையின் சைக்கிளை பிள்ளைகள் ஓடும்போது அதற்கான 'பர்மிட்'டைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் தந்தை வழங்கிய

—2-ஆம் பக்கம் பார்க்க

வாசகர்கள் கவனத்துக்கு

பத்திரிகைத் தாள் கட்டுப்பாடு காரணத்தால், தவிர்க்க முடியாத நிலையில்ஈழமுரசு ஒரு தாளில் மட்டுமே ஞாயிறு முதல் வெளிவருகின்றது. ஓரிரு தினங்களில் நிலைமை சீரடைந்து விடும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

வங்காலை ஆலயத்தில்

ஆயுதங்கள் மீட்கப்பட்ட செய்திக்கு ஆயர் மறுப்பு

(மன்னார்)

வங்காலையில் வண. பிதா மேரி பஸ்தியன் கொலை செய்யப்பட்ட ஆலயத்திலிருந்து ஆயுதங்களும். வெடிமருந்துகளும் கண்டெடுக்கப்பட்டதாகவும், படையினருக்கு எதிராக தாக்குதல் செய்ய ஆலயம் தளமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அரசாங்க வெகுஜன தொடர்புச் சாதனங்கள் வெளியிட்ட அறிக்கை பிழையானதென்று தெரிவித்து அதனைக் கடுமையாக எதிர்த்து மன்னார் ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

வங்காலைக் கிராமத்தில் உயிரிழந்த அப்பாவி மக்களின் படுகொலைக்கும் கண்டனம் தெரி

—2-ஆம் பக்கம் பார்க்க

சாவகச்சேரி நீதிமன்றம் தீக்கிரை!

ஊர்காவற்றுறை மன்றில் கொள்ளை

(சாவகச்சேரி, வேலணை நிருபர்கள்)

சிலதினங்களுக்கு முன்னர் தாக்குதலுக்குள்ளான சாவகச்சேரி மஜிஸ்டிரேட் நீதிமன்றம், நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டது. அதே வேளையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் இரும்புப் பெட்டி, தட்டச்சு இயந்திரம் ஆகியவை நேற்று முன்தினம் இரவு கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றம் முற்றுமுழுதாக எரிந்ததுடன் உள்ளேயிருந்த தளபாடங்களும் கருகின. மேற்கூரை தீப்பிடித்ததால் சரிந்து வீழ்ந்தது

பிரஜைகள் குழுவின் முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பிரஜைகள் குழுக்களின் தலைவர், செயலாளர்களின் முக்கிய கூட்டமொன்று இன்று காலை பதி

2-ஆம் பக்கம் பார்க்க

எம். ஜி. ஆர். பெப். முதல்வாரம் தமிழகம் திரும்புவார்; பின்னரே புதிய மந்திரிசபை

தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரன் அடுத்தமாத முதல் வாரத்தில் நாடு திரும்பலாம் அதன் பின்னரே தமிழக புதிய மந்திரி சபை அமைக்கப்படும். அதுவரை தற்போதைய மந்திரி சபையே தொடர்ந்து செயற்படும். இதற்கு அனுமதி வழங்குமாறு மத்திய அரசும், தமிழக ஆளுனரும் கோரப்பட்டுள்ளனர் என்று தமிழக அமைச்சர் இராம வீரப்பன் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழக அமைச்சர்களான குழந்தைவேலுவும், விஜயபாரதியும் ராஜினாமாச் செய்துள்ளனர். குழந்தைவேலு பாராளுமன்ற எம்.பி.யாகத் தெரிவாகியுள்ளார். விஜயபாரதி சட்டசபைத் தேர்தலில் தோல்வியுற்றார். இக்கடிதங்கள் திரு நெடுஞ்செழியனால் முதல்வரிடம் கையளிக்கப்பட்

—2-ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி தபாலக கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தபாலகத்துக்குள் குண்டுகள், கைத்துப்பாக்கி சகிதம் நேற்றுப்பகல் நுழைந்த இரண்டு இளைஞர்கள் அங்கிருந்த 6800 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றனர். பொலிஸ், இராணுவ கூட்டு முகாமுக்கு அருகாமையில் தபாலகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது

பாதிக்கப்பட்ட மீனவருக்கு 'பொருட்' உதவி வழங்கும்

வடபகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு உடனடியாக 'பொருட்' சமூக அபிவிருத்தி நிறுவனம் உதவி வழங்கவுள்ளது

நோர்வே நாட்டின் சமூக அபிவிருத்தி நிறுவனமான 'பொருட்'டின் பிரதிநிதி திரு. இங்கேகுரெருஸ்லென்ட் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்து யாழ், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்த போது, வடபகுதி மீனவர்கள் தற்போது அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றி அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதனையடுத்தே பாதிக்கப்பட்ட

—2-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

1984 - பெண் குழந்தைகள் அதிகமாக பிறந்த வருடம்!

(வயாவிளான்)

● தல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை பிரசவ வார்ட்டில் கடந்த வருடத்தில் பெண்குழந்தைகளே அதிகமாகப் பிறந்துள்ளன என்பதை ஆஸ்பத்திரி ஊழியர்கள் புள்ளிவிபரங்கள் மூலம் அறியத் தந்துள்ளனர். இந்தக் காலப் பகுதியில் இங்கு நடைபெற்ற பிரசவங்களில் எண்பது வீதமான பிள்ளைகளும் பெண்குழந்தைகளாகவே பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெண் குழந்தைகளே கூடுதலாகப் பிறந்துள்ளதை பிறப்பு இறப்புப் பதிவேடுகள் தெரியப்படுத்துகின்றன.

பிரதமர் ராஜீவ் பேட்டியில் தெரிவித்தது :

பாரதம் அமெரிக்க நல்லுறவை விரும்புகிறது

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்த வேண்டும்!

(புதுடில்லி)

''பாரதத்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான இப்போது உள்ள நல்லுறவு மேலும் வளர வேண்டியது அவசியம்'' என்று பிரதமர் திரு ராஜீவ் காந்தி அமெரிக்க வாரஏடான ''டைம்'' சஞ்சிகைக்குஅளித்த பேட்டிஒன்றில்கூறியிருக்கிறார்.

''பாரதம் சோவியத் யூனியன் பக்கம் சார்ந்து நிற்கிறது என்ற அமெரிக்காவின் எண்ணம் தப்பானது'' என்று சொன்ன திரு. ராஜீவ் காந்தி சமீபத்திய பொதுத் தேர்தல் குறித்துப் பிரஸ்தாபிக்கையில், ''புதிய தலைமுறை பொறுப்பேற்றுள்ளது'' என்றார்.

பாகிஸ்தான் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், ''பாரதத்துக்குப் போரில் நாட்டமில்லை. ஆயினும் பாகிஸ்தான் புதிய ஆயுதங்களைக் குவிப்பது துணைக்கண்டத்தில் ஆயுதப் போட்டாபோட்டி உருவாக இடமாகிவிடும் இந்நிலை தவிர்க்கப்படவேண்டும்,'' என்றார்.

''பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை அதிகளவில் வழங்குவதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும். பாகிஸ்தானும் இந்தவகையில் நவீன ஆயுத இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். பாகிஸ்தான் ஆயுதங்கள் குவிப்பதைப் பாரதம் விரும்பவில்லை. ஆயுதப் போட்டியைப் பாகிஸ்தானே துவக்கிவிட்டுள்ளது. பாகிஸ்தானுடனான மோதலை முறியடிக்கவே பாரதம் விரும்புகிறது'' என்று மற்றொரு பேட்டியில் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

மணிவிழாவில் துணைவேந்தர் 'வித்தி' பேச்சு :

நாவலர், விபுலானந்தர் வழியில் தமிழுக்கு அரும் பணிபுரிபவர் தங்கம்மா அப்பாக்குட்டி

(காங்கேசன்துறை)

''ஆறுமுகநாவலர் விபுலானந்த அடிகளார் ஆகியோர் வரிசையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழ் உலகுக்கு அரும்பணியாற்றி இன்று எம்மத்தியில் சுடர் விட்டு பிரகாசிக்கின்றார். பள்ளிப்பராயத்திலேயே மிகுந்த மதப்பற்று இவரிடத்தில் காணப்பட்டது மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரியும் காலத்தில் இவரைச் சுற்றியிருந்த மதச் சூழல் இல்ல வாழ்வில் 'இவருக்கு வெறுப்பை தோற்றுவித்தது பின்னர் கொழும்பு பாத்திமா வித்தியாசாலையில் பணியாற்றி தீவிர மதப்பற்று, நோன்பின் அவசியம் போன்றவற்றை ஆழமாக உணர்ந்து கொண்டார். ஆறுமுகநாவலர், விபுலானந்தர் ஆகியோரைப் போலவே இவருக்கும் புறச் சமயச் சூழலே சைவசமயப் பற்றை உருவாக்கியது''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு சு. வித்தியானந்தன் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய கலியாண மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற மணிவிழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாவலருக்குப் பின்னர் ஈழத்தை தமிழகத்தோடு இணைத்த பெருமை இவரையே சேரும். இவரது திறமையினாலேயே 81ம் ஆண்டு சைவசித்தாந்த மகாநாடு ஈழத்தில் நடைபெற வாய்ப்புக் கிட்டியது. சோழர் காலத்தைப் போல சைவத்தை மக்கள் வாழ்வோடு இணைந்து வளர்க்க வேண்டுமென்று கூறி சிறுவர் அநாதை இல்லம் ஒன்றை ஆலயத்தில் நிறுவினார் எனவும் சொன்னார்.

துணைவேந்தர் ''சிவ தமிழ் இன்பம்'' என்ற நூலையும் வெளியிட்டு வைத்தார்.

சைக்கிள் அனுமதிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

(7½ ×12 அங்குலநீளமான கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும் இடப்பக்கத்தில் இரண்டு அங்குல இடைவெளி விடவும்)

வாகன உடைமைக்கும் பாவனைக்குமான அதிகாரம் வழங்கும் பத்திரம் - விண்ணப்பம்

முழுப்பெயர் :
விலாசம் ;
அடையாள அட்டை இலக்கம் :
சைக்கிள் இலக்கம் .
1984/85- இறைவரி பத்திர இல :
வழங்கிய உள்ளூராட்சிப் பிரிவு :
பாவிக்கக் கேட்கும் வீதிகள் :
தொழில் :

மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஒழுங்கு விதி (1)ன் கீழ் வாகன உடைமைக்கும், கீழ்க்காணும ஒழுங்கு விதியின் கீழ் வாகன பாவனைக்கும் அதிகாரமளிக்க வேண்டுகின்றேன்.

திகதி : உரிமையாளர் கையொப்பம்

மேற்காட்டிய விண்ணப்பம் ஒழுங்கு விதி 7 (1)க்கு அமைய வாகன உடைமைக்கும், ஒழுங்கு விதி8 ( )க்கு அமைய வாகன பாவிப்புக்கும் 8 (2)க்கு அமைய கீழ் காணும் வீதிகளில் பாவிப்பதற்கென பெற்றுக்கொண்டமை உறுதிப்படுத்தப்படுகின்றது. இக்கடிதத்துடன் பத்து நாட்களுக்குள் வந்து அதிகாரப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்.

இன்று பளைவரை...

—1-ம் பக்கத் தொடர்

பட்டுள்ளது பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பிரயாணிகளை ஏற்றி இறக்க தனியார் பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

பிரஜைகள்...

—1-ஆம் பக்கத் தொடர்

ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை மேல்மாடி ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் பிரஜைகள் குழுவினரின் அண்மைய கொழும்பு விஜயத்தின் முக்கிய விஷயங்களை பற்றி இங்கு ஆராயப்படும். எனவே சம்பந்தப்பட்ட சகலரும் தவறாது சமுகம் கொடுக்க வேண்டுமென இதன் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்

இராணுவத்தைக்...

—1-ம் பக்கத் தொடர்

இராணுவத்தைக் கண்டதும் சாதாரணமாக நடந்து கொள்பவர்கள் மீது சந்தேகம் ஏற்பட நியாயமில்லை என்றும் சொன்னார்

பாதிக்கப்பட்ட...

—1-ஆம் பக்கத் தொடர்

சகல மீனவர்களதும் உணவு, உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருட் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எம் ஜி. ஆர். பெப்...

—1-ஆம் பக்கத் தொடர்

டுள்ளதாகவும் திரு. வீரப்பன் மேலும் தெரிவித்தார்.

முதல்வரை புறூக்லின் மருத்துவ மனையில் சந்தித்துப் பேசிய நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் அனுப்பியுள்ள செய்தியில் எம. ஜி. ஆர். துரித முன்னேற்றம் கண்டுவருவதாகவும், கைகால்களை நன்கு அசைப்பதுடன் சில சொற்களை அவர் தெளிவாகப் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்...

—1-ஆம் பக்கத் தொடர்

வழங்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலை அதிபரும் தமது பாடசாலையில் சைக்கிள் பாவிக்கும் மாணவரின் விண்ணப்பங்களை ஒன்றாகச் சேர்த்து தமது பகுதி உதவி அரசாங்க அதிபரிடம்வழங்கி, அதற்கான பர்மிட்டை ஒன்றாகப் பெற்று மாணவருக்கு விநியோகிக்க முடியுமென பிரிகேடியர் நளின் செனிவரத்தின தெரிவித்தார்.

தந்தைக்குரிய ..

—1-ம் பக்கத் தொடர்

அனுமதிக் கடிதத்தையும் வைத்திருக்க வேண்டும் தமது பிள்ளைகளைத் தவிர வேறெவருக்கும் தந்தையொருவர் சைக்கிளை வழங்க முடியாது.

சைக்கிள் பர்மிட்...

—1ஆம் பக்கத் தொடர்

குருநகர் ராணுவ முகாமில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''சைக்கிள் பர்மிட் விண்ணப்பப்பத்திரங்களை கையளிக்கும்போது, உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் பத்துநாட்களுக்குச் சைக்கிளை ஓடமுடியும் அதற்கிடையில் அக்கடிதத்தைக்காட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 'பர்மிட்'டைப் பெறவேண்டும்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்படுவது போல ''கலர் லேபல்''கள சைக்கிள்களுக்கு வழங்கப்படமாட்டா. ஆனாலும், பாவிக்கும் வீதிகள் பர்மிட்டில் குறிப்பிடப்படும்

யாழ் அரசாங்க அதிபர்

ஆயுதங்கள்...

—1-ஆம் பக்கத் தொடர்

வித்துள்ள மன்னார் ஆயர், இங்குள்ள திருக்குடும்ப கன்னியர் மடத்தினுள் ஆயுதப் படையினர் அத்துமீறிச் சென்றதற்கு எதிர்ப்பையும் தெரிவித்துள்ளார்.

எல்லாவிதமான வன்செயல்களையும் கண்டித்து, மன்னார் மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் அரசு தக்க பாதுகாப்பளிக்க வேண்டுமெனவும்வேண்டுகோள் விடுத்துள்ள இவர், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து விரிவடையக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதால் மீண்டும் நிகழா வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்

முதலியார் காலமானர்

பிரபல சமூக சேவகரும், முன்னாள் அரச உயர் அதிகாரியுமான வட்டுக்கோட்டை முதலியார் சின்னத்தம்பி நேற்றுக் காலமானர்.

திரு. எம் பஞ்சலிங்கம், பொலிஸ் சுப்பிரின்டன்கள் ஐரி. கனகரத்தினம், டி. குணவர்த்தன, இராணுவ மேஜர் கஜநாயக்கா, உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். பி. பாலசிங்கம் ஆகியோரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

நேற்றும் சோதனை

(இருபாலை)

நேற்று அதிகாலை முதல் இருபாலைச்சந்தி, சேர்ச் வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய பகுதிகள் பாதுகாப்புபடையினரால் சுற்றி வளைக்கப்பட்டுசோதனையிடப்பட்டன. முப்பதுக்கும் அதிகமான இளைஞர்களை கைது செய்து விசாரணைக்காக கொண்டு சென்ற போதிலும் அதிகமானவர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டனராம்.

கறுப்புக் கொடி

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய முன்னாள் வண பிதா பஸ்ரியான் வங்காலையில் படுகொலை செய்யப்பட்டதையடுத்து நேற்று மானிப்பாயிலுள்ள சகல றோமன் கத்தோலிக்க தேவாலயங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அடிக்கடி துக்க மணியோசையும் ஒலித்தது. தேவாலய வளவினுள் மக்கள் வேதனையோடு கூடி நின்றார்கள்

மரண அறிவித்தல்

ஞானப்பிரகாசம் தேவதாஸ்

பிறப்பு: 1925-03-5 இறப்பு: 1985-1-7

இவர் காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் ஏக புதல்வனும், திருமதி (தேவதாஸ்) புஸ்பராசாத்தியின் அருமைக் கணவரும், மங்கையற்கரசி, பெனடிற், சந்திரா, இந்திரன், மகேந்திரன், குலேந்திரன், ரவீந்திரன், பாலேந்திரன், புவனேந்திரன், சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராஜா, அமுதா ஆகியோரின் மாமனாரும், திருமதி செல்லம்மாவின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மருதடி லேனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். இதை உற்றார் உறவினர் நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்
2/2 மருதடி லேன்,
மருதடி யாழ்ப்பாணம்

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 8-1-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.